<u>**Principal District Munsif Court, Sankarankovil.**</u>
<u>**OS.No.25/2017**</u>

தேதி : 05.03.2025

வா.சா.1 – வசந்தி

<u>**வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியப்பிரமாண வாக்குமூலத்தின்பேரில் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :-

எனது சொந்த ஊர் சங்கரன்கோவில். தற்போது நான் திருச்செங்கோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விரவங்கள் எனக்கு தெரியும். நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தில் மேல்பக்கம் 2 அடி இடம் விட்டு வீடு கட்டியுள்ளேன். அந்த 2 அடியை சேர்த்து பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளதால், அது சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் மேல்பக்கம் 2 அடி கிழமேலாக விட்டுள்ளேன். என்னுடைய பிராதில் 2 அடி இடம் விட்டுள்ளதாக சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் 2 அடி இடம் விடவில்லை என்றாலும், என்னுடைய பிராதிலேயே 1 1/2 இடம் விட்டதாக மட்டுமே சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1600 சதுரஅடிக்கு மேல் இருக்கும்.

வழக்குச் சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் கணேச முதலியாருக்கும், அவரது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது. வழக்குச் சொத்து கணேச முதலியாருக்கும் அவரது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். முப்பிடாதி முதலியாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 ஆண், 4 பெண் பிள்ளைகள். முப்பிடாதி முதலியாரின் பெண் பிள்ளைகள் அவருடைய மனைவி மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு விடுதலை கொடுத்துவிட்டார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்தை நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் கணேச முதலியாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கியபோது காலி மனையாகத்தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கு என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. பத்திரம் மட்டும்தான் உள்ளது. என்னுடைய பிராதில் வழக்குச் சொத்திற்கு என் பெயரில் பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய அசல் ஆவணம் என் கைவசம்தான் உள்ளது.

என்னுடைய பிராதில் வங்கியில் கடன் வாங்கியபோது அசல் ஆவணத்தை வங்கியில் அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குத் தாக்கல் செய்தபோது, வங்கியில் அடமானம் வைத்திருந்தேன். தற்போது கடனைச் செலுத்தி ஆவணத்தை மீட்டுவிட்டேன். நான் வங்கியில் கடன் வாங்கியதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராது 1ம் தபசில் சொத்திற்கு மேல்புறம் நான் எந்த இடமும் விடவில்லை என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்திற்கு மேல்புறம் காம்பவுண்ட் சுவர் கட்டவில்லை என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதியின் இடம் என்னுடைய இடத்திற்கு மேற்குப்பக்கம் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடைய இடத்தில் கிழமேல் மற்றும் தென்வடலாக எவ்வளவு இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி என்னுடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதாக, நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது சொல்வது சம்பந்தமாக புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் 1ம் பிரதிவாதி என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டவில்லை என்றாலும நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் அதனால்தான் நான் புகார் ஏற்பு ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக, நான் 28.12.2016ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு 1ம் பிரதிவாதி 09.01.2017ம் தேதியில் பதில் அறிவிப்பு வழங்கினார் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய பிராதில், 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு வழங்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிராதில் எத்தனை தபசில் சொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால் ஒரு தபசில் சொத்தை காண்பித்துள்ளேன். என்னுடைய வீட்டின் மேல்பக்கச் சுவருக்கு மேற்குப்பக்த்தில் எனக்கு எந்த இடமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் வாங்கியபோது என்னுடைய இடத்திற்கு மேல்பக்கம் கிழமேலாக 10 அடி அகலத்தில் மற்றும் தென்வடலாக 64 அடி அளவில் நடைபாதையும், கழிவுநீர் ஓடையும் இருந்தது என்றால் சரியல்ல. வழக்கைத் தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வேயர் மூலம் வழக்குச் சொத்தை அளவீடு செய்தேனா என்றால் அளவீடு செய்தேன்.

வழக்குச் சொத்தை சர்வேயர் மூலம் அளவீடு செய்ததாக, என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அளவீடு செய்தோம். நான் வழக்குச் சொத்தை அளவீடு செய்தபோது, என்னுடைய இடத்திற்கு மேல்புறம் இருந்த நடைபாதை மற்றும் கழிவுநீர் ஓடையை நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ள விவரம் தெரியவந்தது என்றாலும், அதனால்தான் இடத்தை அளவீடு செய்தது பற்றி என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்குச் சொத்தை அளவீடு செய்தார்கள். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் சொத்தை அளவீடு செய்தபோது சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை அளவீடு செய்தபிறகு, வழக்குச் சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யவேண்டும் என 1ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த விவரம் எனக்குத் தெரியும். சர்வேயர் மூலமாக சொத்தை அளவீடு செய்தால்தான் என்னுடைய சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

என்னுடைய சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தின் நான்குபுற மால்கள் தெரியுமா என்றால் தெரியும். வடக்குப் பக்கத்தில் கண்ணன் சில்க்ஸ் உரிமையாளர்களின் குடும்பச்சொத்து உள்ளது. மேற்குப்பக்கத்தில் பாலசுப்பிரமணியன் என்பவரின் காலியிடம் உள்ளது. கிழக்குப்பக்கத்தில் ஆவுடையம்மாள் என்பவரின் காலியிடம் உள்ளது. தெற்குப்பக்கத்தில் கணேச முதலியார் காலி மனை உள்ளது. பிராது 1ம் தபசில் சொத்தின் மேற்குப்புற மாலாக பிளாட் எண்.63, 83 PV முருகன் வகையறா மனை என காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதிக்கு வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்பில் காலிமனையாக கிரையம் பெறப்பட்டு, தற்போது வீடு உள்ளதாக சொத்து விவரம் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய பிராதில் 1ம் தபசில் சொத்தாக காலிமனை என்று மட்டும்தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் இடத்திற்கு தென்புறம் குருசாமி, பாலசுப்பிரமணியன் ஆகியோரின் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன குருசாமி, பாலசுப்பிரமணியன் ஆகியோர்களிடம் என்னுடைய இடம் இருப்பதாக நான் பிரச்சனை செய்ததால், குருசாமியும், பாலசுப்பிரமணியனும் எனக்கு எதிராக வேறு ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு 2 அடி சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குருசாமியும், பாலசுப்பிரமணியனும் ஆகியோர் எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கைப் பற்றி நான் இந்தப் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி தன்னுடைய இடத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. பிராது 2ம் தபசில் சொத்து ஸ்தலத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிராது 3ம் தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் சர்வே எண்.258/3A, 3B -யில் உள்ளது என்றால் சரியல்ல. பிராது 3ம் தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனக்குப் பாத்தியப்பட்ட இடத்தை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றாலும் அந்த விவரம் தெரியுமா என்றாலும் தெரியும். 1ம் பிரதிவாதி தனக்குப் பாத்தியப்பட்ட இடத்தை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தவிவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 1ம் பிரதிவாதி விற்பனை செய்து சில நாட்கள் கழித்து எனக்குத் தெரியும். 1ம் பிரதிவாதி சொத்தை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தவிவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றாலும், ஆனால் நான் வேண்டுமென்றே 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் இந்த வழக்கைத் தாக்கல் செய்தேன் என்றாலும், 1ம் பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபிறகு நான் 2ம் பிரதிவாதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் பாதையையும் ஓடையையும் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதை 1ம் பிரதிவாதி கேள்வி கேட்டதால் நான் காழ்ப்புணர்ச்சி கொண்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முப்பிடாதி முதலியாரின் பெண் பிள்ளைகள் விடுதலை கொடுத்த சொத்தைதான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். முப்பிடாதி முதலியாரின் பெண் பிள்ளைகள் எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்திரத்தில் உள்ள சொத்தின் அளவுகள் வேறு என்றாலும், வழக்குச் சொத்தின் அளவுகள் வேறு என்றாலும் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ள வழக்குச் சொத்தின் விஸ்தீரணம், அளவு மற்றும் மால்கள் தவறானது என்றாலும், பிராது 2ம் தபசில் சொத்து ஸ்தலத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கைத் தாக்கல் செய்ய எனக்கு எந்த வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் உண்மைத்தன்மையை மறைத்து நான் வழக்குத் தாக்கல் செய்துள்ளதால், 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u> இல்லை.**

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.